CC.No. 118/2025
PW – 1
21.07.2026
பெயர் : தண்டாயுதபாணி
த/பெ. : அழகன்
எதிரிகள் ஆஜர்

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து சம்பவ காலத்தில் கோவிந்தம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்றால் சரிதான். கோவிந்தம்மாள் சம்பவ காலத்தில் மதியம் சுமார் 2 மணியளவில் அவர் மயக்கமாக இருப்பதாக எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார் என்று சொன்னால் சரிதான். அப்போது மேற்படி கோவிந்தம்மாள் இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்றவர் கீழே விழுந்தவர் காயம்பட்டதாக கூறி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவரை நான் சென்று பார்த்தேன். கோவிந்தம்மாளை நான் விசாரித்தபோது அவர் தடுமாறி கீழே விழுந்ததாக என்னிடம் கூறினார். போலிசார் விசாரணையின்போதும் அவர் தடுமாறி கீழே விழுந்துவிட்டதாக தான் கூறினேன். மருத்துவமனையில் வைத்து கோவிந்தம்மாள் இறந்துபோனதற்காக போலிசார் பிரேத பரிசோதனை மேற்கொள்ளவேண்டி என்னிடம் வெற்று பேப்பரில் கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த வெற்று பேப்பரில் பின்னிட்டு என்ன நிரப்பபட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை சாட்சியத்தை போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் நான் சாட்சியம் அளித்தேன்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25.03.2026ம் தேதி இதேநீதிமன்றத்தில் முதல்விசாரணை சாட்சியமும் குறுக்குவிசாரணை சாட்சியமும் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளித்த பிறகு நீதிமன்றத்திற்கு வெளியே கோவிந்தம்மாள் இறப்பிற்காக எதிரிகளுடன் சமாதானம் செய்துகொண்டு நஷ்டஈடு பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். எதிரிகளிடம் இருந்து நான் நஷ்டஈடு பெற்றுக்கொண்டதால் ஏற்கனவே நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்துக்கு

முரணாக எதிரிகளை காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/–தண்டாயுதபாணி

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

**Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**புதுக்கோட்டை.**